# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8073091
C

1. District : Salem
மாவட்டம்
PS: V&AC.
காவல்நிலையம்
Year: 2018
ஆண்டு
FIR No.: 20/AC/2018
மு.த.அ. எண்
Date: 28.12.2018.
நாள்

2. (i) Act சட்டம்: U/s 7(a) of The Prevention of Sections பிரிவுகள்: –
(ii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: –
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: –
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from :
நாள் முதல்
Date to :
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(1) On the day Kaarthiga Deepam at 5 PM.
(2) Several times through cell phone.
(3) 20.12.2018 at 3.30 pm.
(4) 24.12.2018 at Noon through Cell phone.
(5) 25.12.2018 at Noon and 26.12.2018 at 9½ am through Cell phone.

(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.12.2018.
Time :
நேரம் 06.00hrs

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.12.2018
Time :
நேரம் 06.00hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Oral.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 40 Km South east.
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : Residence of the Complainant, Semmankulikadu, Thumbalpatti village.
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. Malayan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Malayagounder.
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. : –
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : –
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : –
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Agriculture
தொழில்
(g) Address : Semmankulikadu, Thumbalpatti village, Salem TK, Salem District.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Subramani, Forest Guard, Thumbalpatti.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
–

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed in separate Sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

மலையாண் 28-12-18

[signature] 28-12-18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

C. R. Boopathi Rajan.

15. Date & Time of despatch to the court: 28.12.2018
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 09.00 hrs

Name: பெயர் ............ Inspector of Police.
Rank: நிலை VSAC, Salem ....No. எண் .........

சேலம் மாவட்டம், சேலம் தாலுக்கா, தும்பல்பட்டி கிராமம், செம்மண்குழிக்காட்டைச் சேர்ந்த மலையக்கவுண்டர் மகன் மலையன் என்பவர் 28.12.2018ம் தேதி காலை 06.00 மணிக்கு சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் ஆய்வாளரிடம் கொடுத்த வாய்மொழியான புகார் வாக்குமூலத்தின் விபரம் பின்வருமாறு:-

நான் சேலம் மாவட்டம், சேலம் தாலுக்கா, தும்பல்பட்டி கிராமம், செம்மண்குழிக்காட்டில் எனது மனைவி, இரண்டு மகன்கள், மருமகள் மற்றும் பேரக்குழந்தையுடன் குடியிருந்து வருகிறேன். எங்களுக்கு சொந்தமான 4 ஏக்கர் பட்டா நிலத்தில் விவசாயம் செய்தும், அவ்வப்போது விவசாய கூலி வேலைக்கும் சென்று ஜீவனம் செய்து வருகிறோம். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது விவசாய நிலம் தும்பல்பட்டி, மூங்கக்கல் வனப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளது. கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீபம் அன்று எங்கள் வீட்டு நாய், எங்கள் விவசாய நிலத்தில் வைத்து ஒரு உடும்பை பிடித்து கொன்று பாதியை தின்று விட்டு, மீதியை எங்கள் வீட்டு வாசலில் போட்டுவிட்டது. அதனால் நான் அந்த பாதி உடும்பை எடுத்து எங்கள் வீட்டு வாசலில் வைத்து நெருப்பில் தீய்த்து, வாட்டி கறி சமைத்து ஊருக்கு போயிருந்த என் மனைவி மகன்கள் மாலையில் வருவார்களென்றும் அவர்களுக்கு கொடுக்கலாம் என்று எண்ணி ஒரு கிண்ணத்தில் வீட்டில் வைத்திருந்தேன். இதை எப்படியோ தகவல் தெரிந்து கொண்ட தும்பல்பட்டி பாரஸ்ட் கார்டு சுப்பிரமணி அன்று மாலை சுமார் 5 மணியளவில் எனது வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார். நான் நடந்த உண்மையை அப்படியே சொல்லி, நான் சமைத்து வைத்திருந்த உடும்பு கறியை அவரிடம் கிண்ணத்துடன் எடுத்து காட்டினேன். அவர் அந்த கிண்ணத்தை உடும்பு கறியுடன் எனது கையில் அப்படியே பிடித்திருக்கும்படி சொல்லி அவரது செல்போனில் படம் பிடித்துக்கொண்டார். படம் பிடித்துக்கொண்டவுடன் என்னிடம் உடனே ராசிபுரம் பாரஸ்டு ஆபீசுக்கு வரும்படியும், என் மீது கேஸ் போடச்சொல்லி மேலிடத்திலிருந்து உத்தரவு வந்துவிட்டது என்றும், கேஸ் போட்டால் 3 மாதம் ஜாமீனிலேயே வரமுடியாது என்றும் சொல்லி மிரட்டினார். நான் அவரிடம் சார் நான் எந்த தப்பும் செய்யவில்லை நாய் பிடித்து சாப்பிட்டு போட்ட மீதி உடும்பைத்தானே சமைத்தேன் என்று சொல்லி, என்மீது கேஸ் ஏதும் போடவேண்டாம் என்று கெஞ்சிக்கேட்டேன். அதற்கு அவர் தனக்கு 20,000 ரூபாய் கொடுத்தால் கேஸ் போடாமல் விட்டு விடுவதாக சொன்னார். நான் அவரிடம் எனது வறுமை சூழ்நிலையை சொல்லி கெஞ்சிக்கேட்டதின் பேரில் அவர் 15,000 ரூபாய் கொடுக்கும்படி கேட்டார். மீண்டும் நான் அவரிடம் என்னால் அவ்வளவு தொகை முடியாது என்று கெஞ்சிக் கேட்டதினால் அவர் கேட்ட தொகையை கடைசியாக 5,000 ரூபாயாக குறைத்துக்கொண்டு 5000 ரூபாயை தனக்கு கொடுத்தால் உன் மேல் கேஸ் போடாமல் காப்பாற்றி விடுகிறேன் என்று

மலையன்

சொல்லி 5,000 ரூபாயை உடனே கொடுக்கும்படி கேட்டார். அப்போது நான் என்கிட்ட ஒரு பைசா கூட இல்ல என்று சொல்லி சீக்கிரம் பணம் புரட்டி கொண்டு தகவல் சொல்வதாகவும், தகவல் சொன்ன பின்பு வந்து வாங்கி கொள்ளும்படியும் சொன்னேன். அதன் பிறகு காா்டு சுப்பிரமணி பலமுறை என்னை எனது செல்போனில் தொடர்பு கொண்டு தான் கேட்ட பணத்தை பற்றி கேட்டு வந்தார். நானும் என்னால் பணம் புரட்ட முடியவில்லை என்று சொல்லி வந்தேன். கடந்த 20.12.2018 ஆம் தேதி வியாழக்கிழமை சாயங்காலம் சுமார் 3½ மணியளவில் நான் தும்பலப்பட்டி செம்மண்குழிக்காட்டில் உள்ள எனது வீட்டில் இருந்தபோது பாரஸ்ட் கார்டு சுப்ரமணி எனது வீட்டிற்கு வந்து நான் கேட்ட பணம் என்னாச்சு, அப்ப, இப்பன்னு இழுத்தடிச்சிக்கிட்டு இருக்கிற, உடும்புன்னா நெம்பர் 1 கேஸ், உன்னை ஜெயிலுக்கு அனுப்பனுமா? என்று கேட்டார். அதற்கு சார் நான் எந்த தப்பும் செய்யல, நாய் பிடிச்சிவந்து போட்டது, அதனால தயவு செஞ்சி எதுவும் செஞ்சிறாதிங்க சார் என்று கெஞ்சினேன். அதற்கு அவர் உனக்கு கேஸ் இல்லாம செய்யறதுக்குதான் பணம் கேட்டேன். நீ இப்படியே இழுத்தடிச்சா அப்புறம் கேஸ்தான் வரும் என்று சொன்னார். நான் எனது குடும்ப கஷ்டத்தை சொல்லி கெஞ்சினேன். அதற்கு அவர் இப்போ எவ்வளவு தான் பணம் வச்சிருக்கிற என்று கேட்டார். நான் எனக்கு உடம்புக்கு சரியில்லைன்னு ஆஸ்பத்திரிக்கு போக 1500 ரூபாய் தான் வீட்டில் வைத்திருக்கிறேன் என்று சொன்னதும் சரி அத மொதல்ல குடு என்று கேட்டு வாங்கிக்கொண்டார். பிறகு அவர் இவ்வளவு கெஞ்சினதால் நான் கேட்ட 5000 ரூபாயிலிருந்து ஆயிரம் குறைச்சிக்கிட்டு மொத்தம் நாலாயிரம் ரூபா கொடு, என்று சொல்லிவிட்டு அப்போது கொடுத்த 1500 ரூபாய் போக மீதி 2500 ரூபாயை இரண்டொரு நாளில் கொடுத்தால் கேசில்லாமல் செய்து விடலாம் என்று சொன்னார். அதற்கு நான் பணம் புரட்டுவதாக சொன்னேன். அவரும் பணத்தை ரெடி பண்ணிட்டு போன் பண்ணு என்று சொல்லிவிட்டு போய்விட்டார். அதன்பிறகு, எனக்கு உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது. அதனால் பணத்தையும் புரட்டமுடியவில்லை. இதற்கிடையில் 24.12.2018ம் தேதி திங்கள்கிழமை மதியம் நான் பாரஸ்ட் கார்டு சுப்பிரமணிக்கு போன் செய்தபோது அவர் தான் கேட்ட பணம் என்ன ஆச்சு என்று கேட்டார். நான் எனக்கு உடல்நிலை சரியில்லாத விபரத்தையும், பணம் புரட்டமுடியவில்லை என்ற விபரத்தையும் சொன்னேன். பிறகு அடுத்த நாள் 25.12.2018ம் தேதி மதியமும் மற்றும் 26.12.2018ம் தேதி காலை சுமார் 9½ மணி அளவிலும், பாரஸ்ட் கார்டு சுப்பிரமணி எனக்கு போன் செய்து தான் கேட்ட பணத்தை பற்றி கேட்டார். நான் என்னால் பணம் புரட்டமுடியவில்லை என்ற விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் இரண்டு நாள் போன் செய்த போதும் தான் சொன்ன பணத்தை கொடுக்கவில்லையென்றால் கண்டிப்பாக உன்மீது கேஸ்

மலையன்

எழுதி விடுவேன் என்று மிரட்டினார். எனக்கு தும்பல்பட்டி பாரஸ்ட் கார்டு சுப்பிரமணிக்கு அவர் கேட்ட பணம் 2,500 ரூபாயை அவரிடம் லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். படிக்கக்கேட்டேன். நான் சொன்னபடி உள்ளது.

மணிவண்
28-12-18

Sir,

Recorded the oral statement by me in the office computer today on 28.12.2018 between 06.00 hrs and 06.45 hrs and read over to the informant which is admitted to be correct.

[signature] 28.12.2018
(C. R. BOOPATHI RAJAN)
Inspector of Police,
V&AC, Salem.

Sir,

The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr. No 20/AC/2018 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 7.30 hrs today on 28.12.2018 and tookup for investigation.

[signature]
28.12.2018
(C. R. BOOPATHI RAJAN)
Inspector of Police
V&AC, Salem